# DEPOSITION OF WITNESS

------

**IN THE COURT OF** : **SUBORDINATE JUDGE'S COURT, SIVAGANGAI**

Original Suit .. ..
H.M.O.P. .. ..
M.C.O.P. .. ..

**Case No. OS. 424/2020**

Deposition of witness for
Plaintiff **P.W.2**
Defendant
Court

| | | | |
|---|---|---|---|
| **Name** | : திரு. முத்து ராஜீவ் | **Caste** | : |
| **Father's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.06.2023.**

<u>முதல் விசாரணை :</u>

நான் தற்போது பூவாளி குருப் உடைகுளம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். மேற்படி கிராமத்தில் லேட். அழகர் மகன் நாகலிங்கம் என்பவரை பற்றி விசாரித்து சாட்சியம் அளிக்க சொல்லப்பட்டுள்ளது. எனது விசாரணையில் அப்படி ஒரு ஆள் ஊரில் இல்லை. என்னுடைய அறிக்கை தாக்கல் செய்துள்ளேன். அந்த அறிக்கை சா.சா.ஆ.1.ஆகும். ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது. அழகர் என்பவரின் வாரிசு பற்றி விசாரணை செய்தேன். மேற்படி அழகர் என்பவரின் இறப்பு சான்று பதியவில்லை. அவருடைய வாரிசுகள் விபரம் எனது அறிக்கையில் சொல்லியுள்ளேன். அந்த அறிக்கை சா.சா.ஆ.2.ஆகும்.

<u>6வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

எனக்கு வயது 33. நான் 2019ம் வருடம் மார்ச் 6ம் தேதி தேவகோட்டை தாலுகா காரை மற்றும் கல்லங்குடி கிராமத்தில் வி.ஏ.ஓ.வாக பணியில் சேர்ந்தேன். கிராம நிர்வாக அலுவலருக்கு உள்ள அதிகாரங்கள் மற்றும் பணி விபரங்கள் **Revenu standing Order**ல் சொல்லப்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியாது. கிராம நிர்வாக அலுவலர் பணி விபரங்கள் பற்றி தமிழக அரசு வெளியிட்ட சுற்றறிக்கையில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்று

எனக்கு தெரியாது. 23.09.2022ம் தேதியிலிருந்து கூடுதல் பொறுப்பாக பூவாளி கிராமத்திற்கு கிராம நிர்வாக அலுவலராக பொறுப்பேற்று இருக்கிறேன். பூவாளி கிராம குரூப்பில் ஆண்கள் எவ்வளவு, பெண்கள் எவ்வளவு என்ற விபரம் எனக்கு தெரியாது. சமூதாய மக்கள் எந்தெந்த சமூதாய மக்கள் எவ்வளவு பேர் இருக்கிறார் என்ற விபரம் தெரியாது. யார், யாருடைய வாரிசு என நேரடியாக தெரியாது. என்ன தமிழக அரசின் கையேடு படி யார், யாருடைய வாரிசுகள் விசாரணை செய்கிறோம் என்று எனக்கு தெரியாது. பூவாளி குரூப்பில் அழகர் என்ற நபர் இருந்த விபரம் எனக்கு நேரடியாக தெரியாது. அழகர் என்பவருக்கு எத்தனை மனைவி, பிள்ளைகள் என்று எனக்கு நேரடியாக தெரியாது. அழகர் என்பவருக்கு நாகலிங்கம் என்ற நபர் இருந்தாரா என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது. அதற்கான ரெக்கார்டுகளும் கிராமத்தில் கிடையாது என்றால் சரிதான். பூவாளி குரூப்பில் அழகருடைய அப்பா முத்து என்று யூ.டி.ஆர் சிட்டாவில் பெயர் உள்ளது. பூவாளி குரூப் ஏற்படுத்திய காலத்திருந்து இன்றைய வரை முத்து என்ற பெயரில் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. பூவாளி குரூப் ஏற்படுத்திய காலத்திலிருந்து இன்றைய தேதிவரை முத்து என்பவருக்கு அழகர் என்ற பெயருடைய மகன் எத்தனை பேர் இருந்தார்கள் என்ற விபரத்திற்கு ரெக்கார்டு கிடையாது. பூவாளி குரூப் ஏற்படுத்திய காலத்திலிருந்து இன்றைய தேதிவரை முத்து மகன் அழகர் என்பவர் எத்தனை பேர் இறந்தார்கள் என்ற விபரத்திற்கான ஆவணங்கள் கிடையாது. பூவாளி குரூப் ஏற்படுத்திய காலத்திலிருந்து இன்றைய தேதிவரை அழகர் பெயருடைய நபர்களுக்கு யார் மனைவி, வாரிசு என்ற விபரத்திற்கு ஆவணங்கள் கிடையாது. நீதிமன்ற சம்மன் வந்ததிலிருந்து பூவாளி குரூப்பில் அழகர் மகன் நாகலிங்கம் குறித்து கடந்த ஒருவாராமாக விசாரணை செய்தேன். 14.06.2023ம் தேதி காலை 10.00 மணி முதல் 19.06.2023ம் தேதி இரவு 08.00 மணி வரை விசாரணை மேற்கொண்டேன். பூவாளி குரூப்பில் 14.06.2023ம் தேதி காலை 10.00 மணி முதல் அரைமணி நேரத்திற்கு அழகர் மகன் நாகலிங்கம் சம்மந்தமாக சுரசங்கு மகன் பாலவர்ணம், தகப்பனார் பெயர் தெரியாத குமார், மற்றும் வாதி விஜயகுமாரிடமும் விசாரணை செய்தேன். மேற்படி மூன்று நபர்களிடம்

விசாரணை செய்ததற்கு எழுத்து மூலமான வாக்குமூலம் வாங்கவில்லை. 15.06.2023 முதல் 18.06.2023ம் தேதி வரை நான் விசாரணை மேற்கொள்ளவில்லை. 19.06.2023 ம் தேதி மாலை 04.00 மணிமுதல் 05.00 மணி வரை விசாரணை மேற்கொண்டேன். சுரசங்க மகன் சங்கர் என்ற சுதந்திரம் மற்றும் வாதி விஜயகுமார் மற்றும் சோழவந்தான் குருப் கிராம நிர்வாக அலுவலரிடமும் விசாரணை செய்தேன். மேற்படி நபர்களிடம் எழுத்து மூலமான வாக்குமூலம் வாங்கவில்லை. உடையகுளம் கிராமத்தில் அழகர் மகன் நாகலிங்கம் என்ற பெயருடையவர் யாருமே இல்லை என்பதற்கு ஆவணங்கள் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள சா.சா.ஆ.1. அறிக்கையில் மேற்படி விபரங்களை நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி சா.சா.ஆ.1 ஆவணம் சம்பந்தமாக தமிழக அரசாங்கத்திலிருந்து உத்தரவோ, அதிகாரமோ வழங்கப்படவில்லை என்றால் சரிதான். சா.சா.ஆ.2 விசாரணை சம்பந்தமாக முத்து மகன் இறந்தது சம்பந்தமாக சா.சா.ஆ1 ல் விசாரணை செய்த நபர்களிடம் விசாரணை செய்தேன். முத்து என்பவருக்கு உடைகுளம் கிராமத்தில் அழகர் என்ற பெயருடைய மகன் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்பதற்கான ஆவணங்கள் அலுவலகத்தில் இல்லை. அழகர் என்பவருக்கு சா.சா.ஆ.2. அடிப்படையில் அதில் சொல்லப்பட்டுள்ள மனைவி மற்றும் பிள்ளைகள் விபரத்திற்கு ஆவணங்கள் இல்லை என்றால் குடும்ப அட்டையை பார்த்தேன். அந்த குடும்ப அட்டை செல்லம்மாள் என்பவருக்கு வழங்கப்பட்ட குடும்ப அட்டை. அந்த குடும்ப அட்டையின் எண் தெரியாது. எந்த வருடம், எந்த தேதி, எந்த மாதத்தில் வழங்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது. சா.சா.ஆ.2.ல் சொல்லப்பட்ட நபர்களை நேரில் சந்தித்து உறுதி செய்தற்கான புகைப்பட எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் விஜயகுமார் என்பவரை மட்டும் பார்த்தேன் மற்றவர்களை நான் பார்க்கவில்லை. நான் விஜயகுமார் சொன்னதின் அடிப்படையில் இந்த அறிக்கையினை தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய அறிக்கையுடன் செல்லம்மாளுக்கு வழங்கப்பட்டதாக சொல்லப்பட்ட குடும்ப அட்டையின் புகைப்பட நகலை இணைத்து நீதிமன்றத்திற்கு தாக்கல் செய்யவில்லை. செல்லம்மாளின் கணவர் பெயர் அழகர் என குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அழகர்தான் முத்து என்பவரின்

மகன் என்பதற்கு 10(1) அடங்கலில் உள்ளது. அந்த 10(1) அடங்கல் சா.சா.ஆ.3.ஆகும். மேற்படி 10(1) அடங்கலில் முத்துகோனார் மகன் 1. காயாம்பு, 2. அழகு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அது பட்டா நம்பர் 716 ஆகும். அழகர் பெயர் உள்ள பட்டா நம்பர் 717. பட்டா நம்பர் 716ல் சர்வே நம்பர். 284/2 282/1E, 284/ F1, F2, F4 உள்ளது. பட்டா நம்பர் 717 சர்வே நம்பர். 284/9, 290 தடியப்பன் கோனார் மகன் பிச்சையப்ப கோனார் மற்றும் முத்து கோனார் மகன் அழகன் ஆகியோர் பெயரில் பட்டா வழங்கப்பட்டடுள்ளது. பட்டா நம்பர் 717ல் முத்து கோனார் மகன் காயம்பு பெயர் குறிப்பிடபடவில்லை. பட்டா நம்பர் 717ல் தடியப்ப கோனார் மகன் பிச்சைகோனார் என்று எழுதப்பட்டு பின்னர் யப்ப என்ற வாசகம் கூடுதலாக சேர்க்கப்பட்டுள்ளது. முத்து கோனார் மகன் அழகர் என்பதில் க என்ற எழுத்து மற்ற மூன்று எழுதுக்களை காட்டிலும் கூடுதலாக அழுத்தி எழுதப்பட்டுள்ளது என்றால் ஜெராக்ஸ் எடுத்ததினால் அப்படி உள்ளது. அசல் 10(1) அடங்கலில் க என்ற எழுத்து, துணை காலுக்கு மேல் உள்ள ர் என்ற எழுத்தும் அடித்து எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஆனால் அசல் புத்தகத்தில் அடித்து திருத்தப்பட்டது போல் இருக்கிறது. யார், யாருடைய வாரிசு என்று விசாரணை செய்வதற்கு தமிழக அரசு உத்தரவு கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு சம்மன் நீதிமன்றத்திலிருந்து நேரடியாக வந்தது. நீதிமன்றத்திற்கு ஆவணங்களை கொடுக்க செல்வத சம்மந்தமாக தாசில்தாரிடம் முன்அனுமதி வாங்கவில்லை.

<u>மறுவிசாரணை:</u>

எங்களுடை மேல் அதிகாரி கிராமத்தில் ஒரு விசயத்தை பற்றி அறிக்கை வாங்கும் பட்சத்தில் என்னிடம் தான் விசாரிப்பார்கள்.